சுருக்கம்

படிவங்கள் மற்றும் எழுதுபொருள்கள் – மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய அலுவலக உபயோகத்திற்கான எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் மற்றும் கடித உறைகள் மேலும் இரண்டு வருடங்களுக்கு அரசு எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை மூலம் இலவசமாக வழங்கல் – விலக்களிக்கப்பட்ட ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (சி2) துறை

அரசு ஆணை (பத்தாண்டு) எண்.340

நாள்.03.04.2014,
விஜய, பங்குனி:20
திருவள்ளுவர் ஆண்டு 2045,

படிக்கப்பட்டது

1) மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தின் ந.க.எண்.124/ம.ப.தே.வா/க1/2013, நாள்.03.09.2013.
2) எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்கக கடித எண்.5195I/Z3/2013, நாள்.07.12.2013.

----

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், உறுப்பினர் செயலர், மருத்துவப்பணியாளர் தேர்வு வாரியம் அவர்கள் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் நிதி ஆதாரம் போதிய அளவில் இல்லாததால் மேலும் இரண்டாண்டுகளுக்கு இலவசமாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் கோரும் அனைத்து எழுது பொருட்கள், படிவங்கள் போன்றவற்றை இயக்குநர், எழுது பொருட்கள் வழங்கும் துறை அலுவலகத்திலிருந்து அவ்வலுவலகத்திற்கு விலையில்லாமல் அனுப்பி வைத்திட தகுந்த அரசாணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே பார்வை 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம் அவர்கள் மருத்துவ பணிகள் தேர்வு வாரியத்திற்கு ஏற்கனவே அரசாணை (பத்தாண்டு) எண்.129, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.12.02.2013படி இரண்டு ஆண்டுகளுக்கு இலவசமாக படிவங்கள், பதிவேடுகள் வழங்க ஆணையளிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு எழுதுபொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் மற்றும் கடித உறைகள் ஆகியவற்றை இலவசமாக வழங்கப்பட வேண்டும் என அரசு கருதுமேயானால் விலக்களிக்கப்பட்ட அரசாணை அளிக்கப்பட்டால் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படி இனங்கள் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்''

3. அரசு இந்நேர்வினை உரிய ஆவணங்களுடன் பரிசீலித்தது மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்திற்கு போதிய நிதி ஆதாரம் ஏதும் இல்லாத நிலையில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு எழுதுபொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் மற்றும் கடித உறைகள் ஆகியவற்றை இலவசமாக வழங்கவும், இரண்டு வருடங்களுக்கு பின்பு நடைமுறையில் உள்ள விதிகளின்படி முன்பணம் அடிப்படையில் எழுதுபொருட்கள் வழங்கவும் இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.5084/எ௮2.2/14-1, நாள்.27.03.2014-ல் பெறப்பட்ட இசைவுடன் இவ்வரசாணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசு செயலாளர்

பெறுநர்
உறுப்பினர் செயலர்,
மருத்துவப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 006,
இயக்குநர்,
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை-600 002.

நகல்
தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் (எஅ2.2) துறை, சென்னை-600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (துரவு பிரிவு) துறை, சென்னை-600 009.
இ.கோ/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்